# கொவிட்-19 மற்றும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மனிதர்களுக்கான உரிமைகள்: வழிக்காட்டு நெறிகள்


1. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் தங்களின் உடல்நலத்தை காத்துக் கொள்வதற்கான உரிமையின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?
2. நிலையங்கள் மற்றும் காப்பகங்களை வாழ்விடமாக கொண்டிருக்கும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?
3. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?
4. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் பணி, வருமானம் மற்றும் வாழ்வாதார வழிகளின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?
5. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் தங்களின் கல்வியை பெற்றுக் கொள்வதற்கான உரிமையின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?
6. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் வன்முறைக்கு எதிராக தங்களை பாதுகாத்துக் கொள்ளும் உரிமையின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?
7. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் அதிகமாக இடம் பெற்று இருக்கின்ற குறிப்பிட்ட வகை மக்கள் குழுக்களின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?
    a. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள சிறைகைதிகள்
    b. போதுமான வசிப்பிட வசதியற்ற செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள்


## மேற்பார்வை கண்ணோட்டம்

கொவிட்-19 நோய்தொற்று சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் அச்சுறுத்துகிறது என்றாலும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் பாதிப்பு அளவு சமவிகிதமற்றதாக இருக்கிறது. இதற்கு கொவிட்-19ன் பின்விளைவாக மனப்பான்மையில், சுற்றுச்சூழலில் மற்றும் நிறுவன அமைப்புகளில் எழுந்த தடைகளே காரணம் ஆகும்.

செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களில் நிறைய பேர்களின் உடல்நிலை ஏற்கெனவே சீர்கேடான முறையிலேயே இருந்து வந்தது. வைரஸ் தொற்றுக்கு உள்ளாக கூடிய சாத்தியத்தை அது அதிகம் ஏற்படுத்தியது, வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களிடம் அறிகுறிகள் மேலும் கடுமையாக வெளிப்பட்டு இறப்பு விகிதத்தை அதிகரிக்கச் செய்தன. கொவிட்-19 நெருக்கடி சூழலின் போது செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள்

தங்களின் ஆன்றாட வாழ்வுக்கு பலரது ஆதரவை சார்ந்து இருந்தவர்கள், பொது ஊரடங்கு உத்தரவு கட்டுப்பாட்டு விதிகள் செயல்பாட்டில் இருந்த போது தனித்து விடப்பட்டு மிகச் சிரமத்துக்கு உள்ளாகினர். குறிப்பாக, காப்பகங்கள் பராமரிப்பு நிலையங்களையே வசிப்பிடமாக கொண்டு தங்கியிருந்தவர்கள் மிக பாதிக்கப்பட்டனர். பராமரிப்பு இல்லங்கள், மனநல காப்பகங்களில் நேர்ந்த இறப்பு விகிதம் அதற்கான சான்றாக உள்ளது. உடல்நலம் பேனும் சேவைகள் மற்றும் தகவல்களை அணுகுவதற்கான தடைகள் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு இன்னும் தீவிரமாக இருந்தது. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் தொடர்ந்து பாராபட்சத்திற்கு உள்ளாகி கொண்டிருந்த்தோடு வாழ்வாதார வசதிகள் மற்றும் வருமானத்துக்கு துணைபுரியும் வழிவகைகள், ஆன்லைன் கல்விமுறை பங்கேற்பு, வன்முறைக்கு எதிரான பாதுகாப்பு உரிமை ஆகிவற்றை அணுகுவதற்கான தடைகள் அவர்களுக்கு மேலும் கூடுதலாகவே நீடித்தது. குறிப்பிட்ட மக்கள் குழுக்களில் இருந்த செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களான சிறைகைதிகள் மற்றும் வீடற்றவர்கள் அல்லது போதுமான வசிப்பிட வசதியற்றவர்கள் இன்னும் பேராபத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த ஆபத்துக்கள் நிகழ்வதற்கான சாத்தியங்கள் பற்றிய விழிப்புணர்வு அவற்றை சிறந்த முறையில் எதிர்கொள்வதற்கு வழிக்காட்டுகிறது. இதனால் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு எற்படுகின்ற பாதிப்பு அளவு விகிதசாரத்திற்கு முரணாக இருப்பது குறையும். இந்த வழிக்காட்டுதல்களின் குறிக்கோள் பின்வருமாறு:

- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் மீதும் அவர்களது உரிமைகளின் மீதும் நோய் தொற்று ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு;
- உலகமெங்கும் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள நம்பிக்கையூட்டும் சில வெற்றிகரமான நடைமுறைகளின் மீது கவனம் செலுத்துவது;
- மாநிலங்கள் மற்றும் மற்ற பங்களிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை அடையாளம் காண்பது; மற்றும்
- கொவிட்-19 ஐ எதிர்கொள்ளும் செயல்பாட்டில் மக்களின் உரிமைகளை, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் உரிமைகள் உட்பட, உறுதிசெய்வதும் அவற்றைப் பற்றி மேலும் அறிந்துக்கொள்வதற்கான ஆதாரங்களையும் வழங்குவது.

## 1. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் தங்களின் உடல்நலத்தை காத்துக் கொள்வதற்கான உரிமையின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?

செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் கொவிட்-19 தாக்கத்திற்கு அதிகம் உள்ளாகக் கூடிய மக்கள் குழுக்களில் வகைபடுத்தப்படுகிறார்கள். சூழ்நிலை காரணமாக உடல் நலத் தகவல்கள் அணுக இயலாததாக உள்ள நோய்தொற்று காலங்களில், செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு அவற்றை அணுகும் வாய்ப்பு மேலும் குறைவாக இருக்கிறது. உடல்நல பராமரிப்பிற்கான செயல்பாடுகளில் உட்புகுத்தப்பட்டுள்ள சில மருத்துவ வழிகாட்டு நெறிகள் மற்றும் வழக்கமுறைகள் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் மீதான பாகுபாட்டை மிகைப்படுத்துகின்றது. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் வாழ்வியல் தரம் மற்றும் சமூக மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கு எதிராக இந்த வழக்கமுறைகள் சில நேரங்களில் மருத்துவ பாரபட்சத்தை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, பற்றாகுறையாக விளங்கும் ஆதாரவளங்களின் ஒதுக்கீடு தொடர்பான ட்ரைஏஜ் வழிக்காட்டுதல்கள் சில வகையான குறைபாடுகளை தவிர்த்ததன் அடிப்படை, அன்றாட வாழ்வுக்கு மிக அதிகபட்ச ஆதரவு தேவைப்படுவது, "மிக பலவீனமான நிலை", "சிகிச்சை வெற்றி" அடைவதற்கான வாய்ப்பு, மீதமிருக்கும் "வாழக் கூடிய ஆண்டுகள்" கணிப்பு போன்றவைகளை உதாரணமாகச் சொல்லலாம். செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களும் அவர்களின் குடும்பங்களும் நடப்பில் உள்ள உடல் நலம் பேணும் அமைப்புக்கள் வழங்கும் உயிர் பிழைக்க வைக்கும் ஏற்பாடுகள், கைவிடச்செய்யும் அளவுக்கு பெரும் நெருக்கடிகளை தந்தன.

**நம்பிக்கையூட்டும் வகையிலான சில செயல்பாடுகள் என்ன?**

- **சன் மெரினோ குடியரசின்** உயிரியில் நெறிக்குழு கொவிட்-19ற்கான ட்ரைஏஜ் வழிக்காட்டுதல்களை தயாரித்தது. செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களை பாகுபாடுபடுத்துவதை அது தடை செய்கிறது: எனவே, தேர்வு செய்ய வேண்டிய ஒரே சுட்டு அளவீடாக இருப்பது ட்ரைஏஜ் வழிக்காட்டுதல்களை சரியாக செயல்படுத்துவதே. அதாவது, உடல்நிலைமைக்கு ஏற்ப வழங்கப்படும் தேவையான சிகிச்சையின் அடிப்படையில் ஒவ்வொரு மனித உயிரையும் மதிப்பது. வேறு எந்த தேர்வு முறையும், குறிப்பட்டு சொல்ல வேண்டும் என்றால், வயது, பாலினம், சமூக அல்லது இன சார்பு ஆகியவையின் அடிப்படையில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ளது என்பது நெறிபடி ஏற்க முடியாதது. அது உயிர்களை தரவரிசைப் படுத்துவதாக அமைந்து ஒப்புக்கொள்ள முடியாத மனித உரிமை மீறலை ஏற்படுத்திவிடும்." [1]
- **அமெரிக்காவில்** உள்ள அரசியல் அமைப்பு உரிமைகளுக்கான அலுவலகத்தில் இயங்கும் நல்வாழ்வு மற்றும் மனிதசேவைகள் துறை செய்தியறிக்கை ஒன்றை வெளியிட்டது. செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்கள் என்பதன் அடிப்படையில் பாகுபாடுப்படுத்துவதை அதிகாரிகள் தடை செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு வழக்கமானது, வாழ்க்கை தர கணிப்பு, அல்லது வயது, செயல்படும் நிலையில் குறைபாடுள்ளது போன்ற

பல தராதரங்களின் அடிப்படையில் ஒரு மனிதனை மதிப்பீடுவது போன்றவைகள் காரணமாக மருத்துவ கவனிப்பு யாருக்கும் மறுக்கப்படக் கூடாது”.[2] செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு தகவல்கள் மற்றும் தகவல் பரிமாற்றங்களுக்கான அணுகல் வசதிகளையும் அதிகாரிகள் உறுதி செய்வதையும் செய்தி அறிக்கை குறிப்பிட்டு நெருக்கடி நேர செயல்பாடுகளின் பயன் சமமாக சென்றடைய விரும்புகிறது. “நெருக்கடி நேர செயல்பாடுகளில், ஏற்றுக்கொள்ளும்படியான சில ஒதுக்கீடுகளை செய்வது உட்பட, அவை வெற்றிகரமாகவும் தவிர்க்க இயலாத காரணங்களினாலான புறக்கணிப்பு அளவு குறைந்தபட்சமாக இருப்பதை உறுதிபடுத்துகிறது.”

- **ஐக்கிய அரபு அமீரகம்** செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களை அவர்களது வீடுகளிலேயே பரிசோதிக்க தேச அளவிலான திட்டத்தை செயல்படுத்தி ஏப்ரல் மாத இடைப்பகுதி வரை 650,000 கொவிட்-19 பரிசோதனைகளை செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களிடம் மேற்கொண்டது.[3]
- பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியத்தை அதிகமாக கொண்ட சமூகத்தில் உள்ள மக்கள் குழுக்களுக்கான, குழந்தைகள் மற்றும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் உட்பட, பொது செய்திகளை கொண்டு சேர்க்கத் துணைபுரியும் நல்வாழ்வு நிறுவனங்களை ஆதரிக்க வேண்டும் என **பிலிஃபைன்ஸ்** மனித உரிமைகள் ஆனையம் செய்தி வெளியிட்டுள்ளது[4].
- **கனடாவில்**,செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களுக்கான கொவிட்-19 ஆலோசனை குழு அமைக்கப்பட்டது. அதில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் இடம் பெற்று செயல்படும் நிலையில் குறைபாடுகள் தொடர்பான பல் வேறு பிரச்சினைகள், சவால்கள் மற்றும் அமைப்பு ரீதியான இடைவெளிகள், யுக்திகள், மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள், நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும்[5].

## மாநிலங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் என்ன?

- **செயல்படும் நிலையில் குறைபாடுள்ளதை கருத்தில் கொண்டு சிகிச்சை மறுப்பதற்கு தடைவிதிப்பது** மற்றும் விதிகளை திருத்தி செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர், ஆதரவு அளவின் நிலை, வாழ்க்கை தர கணிப்பு செயல்பாடுகள் அல்லது செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு எதிரான வேறு வகையான மருத்துவ பாரபட்சம், போதிய அளவில் இல்லாத ஆதார வளங்களுக்கான ஒதுக்கீடுகளுக்கான வழிகாட்டுதல்கள் உட்பட(வென்ட்டிலேட்டர்கள் அல்லது அவசர சிகிச்சைக்கான அணுகல் வசதி).
- **அறிகுறிகளை வெளிப்படுத்துகின்ற** செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு முன்னுரிமையுடன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வது.

- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் உடல்நலம் மீது கொவிட்-19 ன் தாக்கம் குறித்த **ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துவது**
- **சிகிச்சைகளுக்கான தடைகளை அடையாளம் கண்டு நீக்குவது** (மருத்துவமனைகள், பரிசோதனை மற்றும் தனிமைபடுத்தும் நிலையங்களுகள்) என்பன போன்ற சூழல்களுக்கான அணுகல் வசிதி உட்பட மற்றும் எளிதில் அடையக்கூடிய வழிவகைகளில் புரியக்கூடிய முறைகள் மற்றும் மாதிரிவடிவுகளில் தகவல்கள் மற்றும் பரிமாற்றங்களை கிடைக்கச் செய்வது.
- நோய் தொற்று கால கட்டங்களில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு **மருந்துகளுக்கான அணுகல் வசதியையும் அவை தொடர்ந்து கிடைக்கப்பெறுவதையும் உறுதி செய்வது.**
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு எதிராக தவறான கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற பாரபட்சத்தை தடுக்கும் வகையில் **சுகாதார பணியாளர்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வை வழங்குவது.**
- நோய் தொற்று காலங்களில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் உரிமைகளின் அடிப்படையில் அவர்களுக்கான கட்டமைப்பை உருவாக்க அவர்களையும் அவர்களுக்கான **அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் ஈடுபடுத்தி ஆலோசனைகள் கேட்பது**. அக்கட்டமைப்பு செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கான பொறுப்பை அவர்களுக்குள்ளான பல்வேறு வேறுபாடுகளை கடந்து ஏற்பதும் இதில் உள்ளடங்கும்.

**ஆதாரவளங்கள்**

- கொவிட்-19 உடன் எந்த விதிவிலக்கும் இல்லை: “உயிர்-காக்கும் முயற்சிகளில் ஈடுபடும் உரிமை அனைவருக்கும் உண்டு”- (ஐக்கிய நாட்டு) ஐநா வல்லுனர்கள் கருத்து
- கொவிட்-19, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் உரிமைகள் குறித்து ஐநா சிறப்பு அறிக்கையாளர்: செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களை யார் பாதுகாக்கிறார்கள்?
- உலக சுகாதார அமைப்பு, கொவிட்-19 நோய் தொற்று பரவலின் போது செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்கள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டியவை

## 2. காப்பகங்களை, நிலையங்களை வாழ்விடமாக கொண்டிருக்கும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?

மனநல காப்பகங்கள், சமூக பராமரிப்பு நிலையங்கள்(ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்கள், நாள்-பராமரிப்பு நிலையங்கள், மறுவாழ்வு நிலையங்கள்) மற்றும் முதியோர் நிலையங்கள் போன்றவைகளில் கொவிட்-19 நோய்தொற்று மற்றும் இறப்பு விகிதம் சமவிகிதமற்ற முறையில் அதிகமாக காணப்படுகின்றது. கொவிட்-19 தொடர்பான மொத்த இறப்புகளில் பராமரிப்பு நிலையங்களில் ஏற்பட்ட இறப்புக்களின் எண்ணிக்கை 42%-57% வரை இருந்தன என சில நாடுகளின் முதற்கட்ட ஆய்வுகள் அறிவித்தன[6]. காப்பகங்களை வசிப்பிடமாக கொண்டிருந்த செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் கொவிட்-19 நோய் தொற்றுக்கு உள்ளாகும் ஆபத்தை அதிகம் எதிர்கொண்டனர். அதற்கு காரணம் ஏற்கெனவே பல்வேறு காரணங்களுக்காக பாதிக்கப்பட்டிருந்த அவர்களது உடல் நிலை, வசிப்பவர்கள் மற்றும் ஊழியர்களுடன் சமூக இடைவெளியை நடைமுறைப்படுத்துவதில் இருந்த சிக்கல், மற்றும் ஊழியர்களால் புறக்கணிக்கப்படுவதை சொல்லலாம். காப்பகங்களை வசிப்பிடமாக கொண்டிருந்த செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்கள் புறக்கணிப்பு, இறுக்கமான முறையில் நேரும் கட்டுப்பாடு, தனிமை மற்றும் வன்முறை போன்ற மனித உரிமை மீறல் சூழல்களையும் சந்திக்க வேண்டிய ஆபத்தில் இருந்தனர்.

**நம்பிக்கையூட்டும் வகையிலான சில செயல்பாடுகள் என்ன?**

- **ஸ்விட்சர்லாந்து** மற்றும் **ஸ்பெயின்** நாடுகளில், காப்பகங்கள் மற்றும் பராமரிப்பு நிலையங்களில் வாழ்ந்து வந்த செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் சாத்தியப்பட்ட இடங்களில் எல்லாம் நிலையங்களை விட்டு வெளியேற்றப்பட்டு அவர்களது குடும்பங்களுடன் வாழ அனுப்பி வைக்கப்பட்டனர்.
- காப்பக நிலையங்களுக்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட அளவீடுகளை கருத்தில் கொண்டு முன்னுரிமை பரிசோதனை வழிக்காட்டு நெறிகள் **கனடா**வில் வெளியிடப்பட்டன.[7]

**மாநிலங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் என்ன?**

- **காப்பகங்கள், நிலையங்களில் உள்ள செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களை வெளி அனுப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு** அவர்களுக்கான ஆதரவை குடும்பம் மற்றும்/அல்லது வழக்குமுறைகளில் சாராத செயல்பாடுகளின் ஊடாக வழங்குவது மற்றும் அதற்கான நிதி ஆதரவு சேவைகளை பொதுதுறை அல்லது தனியார் துறை சேவை வழங்குனர்கள் மூலமாக ஏற்படுத்துவது.
- **நிலையங்களுக்குள் தொற்று பாதிப்பை குறைக்க உரிய இடைக்காலத்தில், பரிசோதனைக்கு முன்னுரிமை வழங்கி தடுப்பு முறைகளை ஊக்குவிக்கவும்.** கூட்டம் சேர்வதை நெறிபடுத்துதல், வசிப்பாளர்கள் இடையே சமூக இடைவெளியை

நடைமுறைபடுத்தல், பார்வையாளர்களுக்கான நேரத்தை திருத்தி அமைத்தல், பாதுகாப்பு சாதனங்களை பயன்படுத்துதல் போன்றவைகளின் மூலம் இதை செய்யலாம்.

- தடுப்பு முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக மனிதவளம் மற்றும் நிதிவளம் உட்பட **காப்பக நிலையங்களின் ஆதாரவளங்களை *தற்காலிகமாக* உயர்த்தவும்.**
- **நெருக்கடி சூழலின் போது காப்பக நிலையங்களில் வாழும் மக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யவும்**. அவர்கள் மீது எதேசதிகார போக்கு, வன்முறை மற்றும் அவதூறு போன்றவைகளிலிருந்து விடுவிக்கப்படுவது, பாகுபாடற்ற தன்மை, உரிய தகவல்கள் தெரிவிப்பட்டு முறையான ஒப்புதலை வழங்குவதற்கான உரிமை மற்றும் நியாயம் கேட்பதற்கான அணுகல் வசதி[8] ஆகியவையும் உள்ளடங்கும்.
- **காப்பக அமைப்புகளை கட்டவிழ்த்து சிறப்பான வழிமுறைகளை கையாண்டு** நிலையங்களை மூடுவதற்கான யுக்திகளை செயல்படுத்தி மனிதர்களை சமூகங்களுக்கு திரும்ப வழி செய்யுங்கள், முதியோர்கள் மற்றும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கான ஆதரவு மற்றும் சேவைகளை வலிமைப்படுத்தவும்.

**ஆதாரவளங்கள்**

- உலக சுகாதார அமைப்பின் நோய் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு வழிக்காட்டுதல்கள் கொவிட்-19 பின்புலத்தில் நீண்ட கால பராமரிப்பு நிலையங்களுக்கானது இடைக்கால வழிக்காட்டுதல், 21 மார்ச் 2020
- உலக சுகாதார அமைப்பு, கொவிட்-19 நோய் தொற்று பரவலின் போது செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களை கருத்தில் கொண்ட ஒதுக்கீடுகள்
- சமூக உளவியல் அடிப்படையில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் கொவிட்-19 நோய்தொற்று சூழலில் வெளியிட்டுள்ள பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கை

## 3. சமூகங்களில் வாழ்வதற்கு, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?

கொவிட்-19 எதிர்வினையாற்றல் முறைகளின் காரணமாக செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள், சமூகங்களில் தங்கள் அன்றாட வாழ்வை மேற்கொள்வதில் குறிப்பிட்ட வகையான தடைகளை சந்திக்கிறார்கள். குறிப்பாக அவர்களது சுயசார்பு, உடல்நலம் மற்றும் வாழ்கைமுறைகளை கருத்தில் கொள்ளாத வீட்டிலேயே இருக்க வேண்டிய கட்டுப்பாட்டு சூழலின் காரணமாக.[9]

செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுள் நிறைய பேர்கள் தங்களது அன்றாட வாழ்விற்கு பிறரை சார்ந்திருப்பவர்கள்(சேவை வழங்குனர்களின் திட்டமிடப்பட்ட ஆதரவு அல்லது உறவினர்கள்/நண்பர்களின் திட்டம் வகுக்கப்படாத ஆதரவு) நடமாடுவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் சமூக இடைவெளி கட்டுப்பாடுகளின் காரணமாக ஆதரவற்ற நிலையை உணர்கிறார்கள். உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகள் ஆகியவற்றுக்கான அணுகல் வசதியின்மை தங்களது தினசரி அடிப்படை நடவடிக்கைகளான குளிப்பது, சமைப்பது அல்லது சாப்பிடுவது போன்றவைகளை மேற்கொள்ளவும் தடை ஏற்படுத்தியது.

கொவிட்-19 பற்றி பொது மக்களுக்கான தகவல்கள் திட்டமிடப்பட்ட முறையில் தெரிவிக்கப்படவில்லை. செயல்படும் நிலையில் குறைபாடுகள் உள்ள மக்களுக்கு அணுகுவதற்கான வடிவமாதிரிகள் மற்றும் முறைகளில் இல்லை (எடுத்துக்காட்டாக செய்கை மொழி, திரையில் ஓடும் எழுத்துக்கள். எளிதில் படிப்பதற்கான வடிவம், முதலியவை).

செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுள் சிலருக்கு, உதாரணமாக சமூக உளவியல் அடிப்படைகளில் செயல்பட முடியாத நிலை மற்றும் தகவல் பரிமாற்றத்தில் சிக்கலை அனுபவிப்பவர்களுக்கு வீட்டிற்குள் கட்டுப்பட்டு இருக்க வேண்டிய சூழல் பாதிப்பை ஏற்படுத்தலாம். மிக கவனத்துடன் அவ்வப்போது சிறிது நேரம் வெளியில் சென்று வருவதே இத்தகைய சூழல்களை அவர்கள் தாக்குப்பிடிக்க உதவியாக இருக்கும்.

**நம்பிக்கையூட்டும் வகையிலான சில செயல்பாடுகள் என்ன?**

- அணுக இயலக்கூடிய வடிவ மாதிரிகளில் தேவையான தகவல்களை வழங்கும் திட்டமுறையை **பாராகுவே**[10] மற்றும் **பனாமா**[11] நாடுகள் உருவாக்கியிருக்கின்றன. அதற்கு இணையான வகையில் **நியூசிலாந்து**[12] நலவாழ்வு அமைச்சு அணுக இயலக்கூடிய வடிவ மாதிரிகளில் தேவையான தகவல்களை வழங்குவதற்கென்றே தனது இணையதளத்தின் ஒரு பகுதியை ஒதுக்கியுள்ளது. செய்கை மொழி மற்றும் எளிதில் படிப்பதற்கான வடிவமாதிரிகளும் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. **மெக்சிகோ** அரசாங்கமும் இதே போன்ற வழிமுறையை கடைபிடித்துள்ளது.[13]
- **அர்ஜென்ட்டினா**வில், [2] செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு உதவுகின்ற ஆதரிக்கும் நபர்கள்-, நடமாடுவதற்கான கட்டுப்பாடு மற்றும் சமூக இடைவெளி முறைகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். சமூக ஆதரவுடன் இயங்கும் பன்முனையில் இயங்கும் பணிகுழுக்கள் **கொலம்பியா**வில் வளர்த்து எடுக்கப்படுகின்றன. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் மற்றும் முதியோர்களுக்கு உதவுகின்ற தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு மளிகை மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் வாங்கித் தரப்படுகின்றன[15]. **பனாமா**விலும், பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியத்தை குறைக்கும் நோக்கோடு, செயல்படும் நிலையில்

குறைபாடுள்ள மக்களுக்கும் அவர்களின் தனிஉதவியாளர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு குறிப்பிட்ட நேரங்கள் ஒதுக்கப்படுகின்றன.[16]

- **பிரிட்டன் மற்றும் வடக்கு ஐயர்லாந்து**[17] முதற்கட்டமாக கடுமையான கட்டுப்பாட்டு விதிகளை தளர்த்தியுள்ளன. சமூக உளவியல் ரீதியாகவும் தகவல் பரிமாற்றத்திலும் சிக்கல் உள்ள நபர்கள் மற்றும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் வெளியே செல்வதற்கான விதிவிலக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **ஃபிரான்ஸ்** நாடும் இதே போன்ற திட்ட முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.[18]

## மாநிலங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் என்ன?

- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு, சைகை மொழி, திரையில் ஓடும் எழுத்துக்கள், படிப்பதற்கு எளிதான வடிவமாதிரிகள் போன்றவை உட்பட பல வடிவமாதிரிகளில் **கொவிட்-19 குறித்த தகவல்கள் அணுக இயலக்கூடியதாக இருப்பதை** உறுதி செய்வது.
- **செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு ஆதரவு வழங்குபவர்களுக்கு வீட்டை விட்டு வெளிவரக்கூடாது கட்டுப்பாடு நிபந்தனைகளிலிருந்து-**, ஆதரவு வழங்கும் பொருட்டு **விதிவிலக்கு வழங்குவது**.
- சமூக ஆதரவுடனான **பன்முனைகளில் இயங்கும் பணிக்குழுக்களை வளர்த்து எடுத்து** ஒருங்கிணைத்து ஊக்குவிப்பது மற்றும் தடுப்புநடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு பொருட்கள், உபகரணங்கள், சாதனங்கள் இருப்பதை உறுதி செய்வது.
- வீட்டிற்குள் இருங்கள்/ நடமாடுவதற்கான கட்டுப்பாடு விதிகள் செயல்பாட்டில் இருக்கும் போது பேரங்காடிகள், மளிகை கடைகள் மற்றும் மற்ற அத்தியாவசியப் பொருட்கள் விற்கும் கடைகளில் **குறிப்பிட்ட நேரங்களில்-**, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கும் அவர்களின் தனிஉதவியாளர்களுக்கும் முன்னுரிமை அளிக்க திட்டமிடுங்கள்.
- வீட்டை விட்டு வெளியேறியவர்கள் என்று நடமாட்ட விதிகளை மீறியவர்கள் மீது ஒரே அடியாக அபராதங்கள் விதிக்காமல் வசிப்பிடங்களற்ற செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு **ஏற்கத்தக்க அளவிலான தங்குவற்கான இடவசதியை உறுதிப்படுத்தவும்**.

## ஆதாரவளங்கள்

- உலக சுகாதார அமைப்பு, கொவிட்-19 நோய் தொற்று பரவலின் போது செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்கள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டியவை
- யுஎன்பிஆர்பிடி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் இதர பிரிவினர் கொவிட்-19 நெருக்கடி தொடர்பிலான எதிர்வினையாற்றல் செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களையும் உள்ளடக்கிய சமூக பாதுகாப்பு

## 4. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் பணி, வருமானம் மற்றும் வாழ்வாதார வழிகளின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?

பணி அமர்த்தப்படுதலின் போது செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் பணியை பெறுவதற்கான வாய்ப்பு குறைவு, அப்படியே அவர்கள் பணி அமர்த்தப்பட்டாலும் முறைசாராத துறைகளிலேயே[19] அவர்கள் பெரும்பாலும் பணி அமர்த்தப்படுகின்றனர். அதன் விளைவாக பணி அடிப்படையிலான சமூக காப்பீட்டுகளை அணுக இயல்வதற்கான வசதி மற்றவர்களை விட அவர்களுக்கு குறைவாகவே இருப்பதால் தற்போதைய கொவிட்-19 சூழலில் பொருளாதார தாக்கத்தை தாங்கும் திறன் அவர்களுக்கு குறைகிறது. பணியில் இருப்பவர்கள் அல்லது சுய தொழில் புரிபவர்கள்,[20] பணி இடத்தில் இருக்கும் இயந்திரங்கள், சாதனங்கள் வீட்டில் இடம் பெறாத காரணத்தால் விட்டில் இருந்து பணி செய்வது அவர்களுக்கு தடைப்பட்டிருப்பதோடு பணி மற்றும் வருமானத்தை இழக்கும் சாத்தியமும் அவர்களுக்கு அதிகமாக இருக்கும். கூடுதலாக, கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகள் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களை மறைமுகமாக பாதிக்கலாம். குடும்பம் மற்றும் வீட்டிற்கான முதன்மை பொருள் ஈட்டாளர் பணி செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டிருப்பதால், வீட்டிற்கான ஒட்டுமொத்த வருமானத்தில் ஒரு தாக்கத்தை எதிர்மறையாக ஏற்படுத்துகின்றது. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மீது இந்த வருமான இழப்பு சமவிகிதமற்ற முறையில் ஒரு சுமையை ஏற்படுத்துகிறது. செயல்படும் நிலை இன்மையின் காரணமாக உள்ள செலவீனங்கள் மற்றும் தொடர்பான கூடுதல் செலவுகள்(அணுக இயலக்கூடிய வீடு மற்றும் உபகரணங்கள், உதவி சாதனங்கள், குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகள், முதலியன) அவர்களை வறுமையின் பிடியில் சிக்க வைக்கின்றன.

**நம்பிக்கையூட்டும் வகையிலான சில செயல்பாடுகள் என்ன?**

- கொவிட்-19ற்கான எதிர்வினையாற்றலில், **பல்கேரியா, மால்ட்டா** மற்றும் **லித்துவேனியா** ஆகிய நாடுகள் தங்களின் சமூக பாதுகாப்பு அமைப்புகளுக்கான நிதி வழங்கலை அதிகரித்திருக்கின்றன. சமூக ஆதரவு சேவைகளை விரிவுப்படுத்தவும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள்[21] உட்பட பயனாளிகள் எண்ணிக்கை கூடுதலாக வேண்டும்.
- **அர்ஜென்டினா** மற்றும் **பெரு** நாடுகளில் அனுகூலங்களை பெற்று வரும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள், கூடுதல் சலுகைகளை தற்போதை கொவிட்-19 நெருக்கடி சூழலில் பெற்று வருகிறார்கள்[22]. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள

மக்களுக்காக இதே போன்ற ஒரு படிஊதியத்தை[23] **ஃபிரான்ஸ்** அறிவித்தது. குறைவான வருமானம் கொண்ட வீடுகளுக்கு, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு மற்றும் வசிப்பிடம் இல்லாத மக்களுக்கு[24] **துனிசியா** நாட்டின் அவசரகால திட்டங்களுள் பண மாற்றும் உள்ளடங்கியிருந்தது.

- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் நிதி ஆதார நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் **அமெரிக்கா**[25] வரி விலக்கு திட்டங்களை இந்த சூழலில் ஏற்படுத்தியுள்ளது.

**மாநிலங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் என்ன?**

- **எந்த வருமானமும் இல்லாத செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு நிதி உதவி வழங்குவது** (உதாரணமாக. ரொக்கமாக பணம்; வரி சலுகை முறைகள், மானிய விலையில் பொருட்கள், முதலியன).
- **செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு தற்போது நடப்பில் வழங்கப்பட்டு வருமை சலுகைகளை அதிகரிப்பது-**, கூடுதல் செலவீனங்களை உள்ளடக்குவதற்கான முன்பணம் உட்பட.
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்கள் அதன் காரணமாக தகுதி பெற்றுள்ள சில சலுகைகளுக்கான காலவரம்பு விரைவில் கடப்பதாக இருந்தால் அவற்றுக்கு **தன்னியக்கமாக நீட்டிப்பை வழங்குவது.**
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுள் சுய தொழில் மேற்கொள்கின்றவர்களுக்கான வருமான **இழப்பை ஈடு செய்ய நிதி இழப்பீடு** வழங்குவது.
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுள் வேலைவாய்ப்பின்மை அல்லது உடல்நல சீர்கேடு அனுகூலங்கள் பெறுவதற்கான வரையறைக்கு உட்படாமல் குடும்ப உறுப்பினர்(களாக) இருக்கும் வேளையில்-, நோய் தொற்று ஏற்படுவதை தடுக்கும் நோக்கோடு பணி நிறுத்தம் மேற்கொள்பவர்களுக்கு **நிதி உதவி திட்டங்களை** நடைமுறைப்படுத்துவது.
- **வரி செலுத்துதற்கான கால நீட்டிப்பு, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களை ஊழியர்களாக நியமித்துள்ள பணிஅமர்த்துனர்களுக்கு** தொலை தொடர்பு வாயிலாக பணியாற்ற உரிய சாதனங்களை வழங்குவதற்கான நிதி உதவி போன்றவைகள் உள்ளிட்ட நிதி உதவிகளை வழங்குவது.
- **உணவு வழங்கும் திட்டங்கள்-**, செயல்படும் நிலையில் குறைபாடுகள் உள்ள மக்களையும் உள்ளடக்கி இருப்பதை, அவர்களது தேவைகளுக்கு உகந்ததாக இருப்பதை, அது அவர்களது வீடுகளுக்கே சென்று வழங்கப்படுவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை உறுதி செய்வது.

**ஆதாரவளங்கள்**

- [சர்வதேச தொழிலாளர் அமைப்பு, கொவிட்-19 எதிர்வினையாற்றலில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் உட்பட எவரும் எப்போதும் கைவிடப்படவில்லை]
- [யுஎன்பிஆர்பிடி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் இதர பிரிவினர் கொவிட்-19 நெருக்கடி தொடர்பிலான எதிர்வினையாற்றல் செயல்படும் நிலையில் இல்லாதவர்களையும் உள்ளடக்கிய சமூக பாதுகாப்பு]
- [கொவிட்-19ற்கான எதிர்வினையாற்றல், சர்வதேச ரொக்க நிதி]

## 5. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் தங்களின் கல்வியை பெற்றுக் கொள்வதற்கான உரிமையின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?

செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் தங்கள் கல்வியை நிறைவு செய்வதற்கான சாத்தியக்கூறு மற்றவர்களை காட்டிலும் குறைவாகும். அவர்கள் பள்ளி படிப்பிலிருந்து[26] வெளியேற்றப்படுவதற்கான சாத்தியங்களும் அதிகம். கொவிட்-19 காரணமாக பெரும்பாலான மாநிலங்கள் கல்வி நிறுவனங்களை[27] தற்காலிகமாக மூடியுள்ளன. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்வியை வழங்குவதில் ஏற்பட்டுள்ள இந்த இடையூறின் தாக்கத்தை குறைக்க, சில மாநிலங்கள் தொலை தொடர்பு கல்வி பயிற்சி முறைகளை கடைப்பிடிக்கின்றன. இது போன்ற சூழல்களில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மாணவர்கள் தேவையான சாதனங்கள் இன்மை, இணையத் தொடர்பு இன்மை, ஆன்லைன் பள்ளி திட்டங்களை தொடர்வதற்கு தேவையான ஆதரவிற்கான அனுமதி மற்றும் அணுகுவதற்கு இயலக்கூடிய பாடமுறைகள் போன்றவைகளால் தடைகளை எதிர்கொள்கின்றனர். இதன் காரணமாக செயல்படும் நிலையில் குறைபாடுள்ள நிறைய மாணவர்கள் பின்தங்குகின்றனர், அதிலும் குறிப்பாக அறிவுத்தின்றனில் குறைபாடு உடைய குழந்தைகள்.

மேலும், செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மாணவர்கள் பள்ளிகள் மூடப்படுவதன் காரணமாக பள்ளிகளில் கிடைக்கும் மதிய உணவு, தங்கள் நண்பர்கள் மற்றும் உடன் படிப்பவர்களுடன் விளையாட்டு மற்றும் போட்டிகளில் கலந்துக் கொள்ளும் வாய்ப்புகள் போன்றவைகள் உட்பட கிடைக்கப் பெறாமல் வேறு வகைகளிலும் எதிர்மறையாக பாதிக்கப்பட்டுள்ளனர்,

**நம்பிக்கையூட்டும் வகையிலான சில செயல்பாடுகள் என்ன?**

- தனிநபர் மற்றும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர் சட்டத்திற்கான[28] வழிக்காட்டும் ஆவணத்தை **அமெரிக்கா** அதன் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு ஏற்ப பொருந்தும் வகையில் வெளியிட்டது.
- வீட்டில் தனிமைபடுத்தப்பட்டு[29] இருக்க வேண்டிய குழந்தைகளது கல்வியை ஆதரிப்பதற்கு ஆசிரியர்களுக்கான பரிந்துரைகளை **ஈக்வேடார்** வெளியிட்டது.
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள குழந்தைகளின்[30] கல்வி திட்டத்தை வீட்டில்
- இருக்கும் போது சிறந்த முறையில் ஆதரிக்கும் பொருட்டு தகவல்களை பிரித்தளித்து பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளர்கள் போட்டிதிறன் மிக்க பொறுப்புக்களை பகிர்வதற்கான அமைப்புக்களை **பிரிட்டன் மற்றும் வடக்கு ஐயர்லாந்து** நாடுகள் நிறுவியுள்ளன.

**மாநிலங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் என்ன?**

- பள்ளிக்கு வெளியே கல்வியை வழங்கும் போது-, கிடைக்கப்பெறும் பலவகையான ஆதார வளங்கள், கல்வி மற்றும் பள்ளி நிறுவனங்களிற்கான பொறுப்புக்களின் எல்லைகள் குறித்த **தெளிவான வழிக்காட்டுதலை வழங்க வேண்டும்.**
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கு **தொலைதூர கற்பித்தலை சாத்தியமாக்கும் வகையில் மென்பொருட்கள் மற்றும் இணையத்தை அணுக இயல்வது** போன்றவற்றை உறுதிப்படுத்தவும். ஏற்றுக் கொள்ளத்தக்க வசிப்பிடம் மற்றும் உதவி சாதனங்களும் இவற்றில் அடங்கும்.
- பலவற்றையும் உள்ளடக்கி **தொலை தூர கற்பித்தலுக்கான வழிக்காட்டுதல், பயிற்சி மற்றும் ஆதரவை ஆசிரியர்களுக்கு வழங்குங்கள்.**
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள குழந்தைகளின் ஆரம்ப கல்விக்கு பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளர்கள் உடன் **நெருக்கமான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துங்கள்.**
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான கல்வி திட்டத்தை ஆதரிப்பதற்கும் சாதனங்களை பொருத்தி அமைப்பதற்கும் **பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளர்களுக்கு வழிக்காட்டுலையும் தொலைதூர ஆதரவையும் வழங்குங்கள்.**
- தொலைதூர கற்பித்தலை ஆதரிக்கும் முகமாக செயல்படும் நிலையில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அணுகுவதற்கு இயலும் **ஏற்ற பாடதிட்ட நூல்களை உருவாக்குங்கள்.**
- பல்வேறு ஊடக முறைகளில் பிரித்து அளிக்கவும் (கோரிக்கை விடுக்கப்படும் போது ஆன்லைன், தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சிகள், முதலியவை) **எளிதில் அணுகுவதற்கு இயலும் வகையான செவியொளி-காணொளி பாடதிட்ட நூல்களை உருவாக்குங்கள்**

**ஆதாரவளங்கள்**

- குழந்தைகளின் உரிமையை பாதுகாக்க மாநிலங்களுக்கான அழைப்பு விடுக்கும் சிஆர்சி குழு அறிக்கை குழந்தைகளின் மீதான கொவிட்-19 ன் தாக்கம் குறித்து உடல், உணர்வு மற்றும் உளவியல் அளவில்
- கொவிட்-19ற்கான எதிர்வினையாற்றல் குறித்து யுனிசெஃப், செயல்படும் நிலையில் குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான கவனிப்பும் கண்ணோட்டமும்
- கொவிட்-19ற்கான எதிர்வினையாற்றல் குறித்து யுனெஸ்கோ இணையத்தளம்

## 6. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் வன்முறைக்கு எதிராக தங்களை பாதுகாத்துக் கொள்ளும் உரிமையின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன?

செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் வன்முறைகளால் பாதிப்புக்கு உள்ளாவதற்கான சாத்தியம் அதிகமிருக்கிறது, அதுவும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் போது. குறைபாடுள்ள உள்ள பெண்கள் மற்றும் இளம்பெண்கள் பாலின அடிப்படையிலும் பாலுறவு அடிப்படையிலும் தங்களது இணக்கமான துணைவரினாலும் மற்றும் குடும்ப வன்முறையிலும் அதிக அளவு பாதிக்கப்படுகின்றனர்[31]. குறைபாடுள்ள பெண்கள் மற்றும் இளம்பெண்கள் மற்ற பெண்களை காட்டிலும் கூடுதலான வன்முறையை எதிர்கொள்வதற்கான சாத்தியத்தை மட்டும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் குறைபாடுள்ள ஆண்களை காட்டிலும் அதிகமான வன்முறையை சந்திக்கிறார்கள்[32]. பாலின அடிப்படையில் மற்றும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களுக்கு நேரும் வன்முறைகள் கொவிட்-19 சூழலில் தற்போது கிடைக்கப்பெறவில்லை என்றாலும், இது போன்ற சூழல்களில்-, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் மீது வன்முறை அதிகம் நேரும் என்றே முந்தைய அனுபவங்கள் உணர்த்துகின்றன33.

குடும்ப வன்முறை குறித்து புகார் அளிப்பதற்கும் அவற்றுக்கான சேவைகளை அணுகுவதற்கும் உதவிகளை பெறுவதற்கும், குறிப்பாக செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களுக்கு பெரும் சவாலாக இருக்கின்றன காரணம் இத்தகைய சேவைகள் குறைபாடுள்ளவர்களை தனியே உட்படுத்தவில்லை. காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோர்களுக்கு தொலைபேசி வசதிகள்-, தகவல் பரிமாற்றுனரை கொண்டிருக்கவில்லை. செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களுக்கு ஏற்ற வகையில் அவசரநிலை தங்குமிடங்களோ அல்லது சேவை மையங்களோ இல்லை.

### நம்பிக்கையூட்டும் வகையிலான சில செயல்பாடுகள் என்ன?

**பெரு** நாட்டில், நெருக்கடி காலத்தின் போது செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களை தொலைப்பேசி வாயிலாக தொடர்பு கொள்ளும்படியும் நெருக்கடி நிலை விலக்கப்பட்ட பின் நேரில் சந்திக்கும் படியும் உள்ளூர் அரசாங்கங்களுக்கு வழிக்காட்டுதல்கள் வழங்கப்பட்டன. வன்முறை நிகழும் சூழ்நிலைகள் அதிகாரிகளிடம்[34] அறிக்கையிடப்பட வேண்டியது அவசியம் என்றும் உத்தரவிடப்பட்டது. இது தவிர்த்து ஓஹெச்சிஹெச்ஆர் நம்பிக்கையூட்டும் புதிய செயல்பாடுகளை இந்த பகுதியில் அடையாளம் காண முடியவில்லை, அதுவும் கவலை அளிக்க கூடியதாக இருந்தது. பல நாடுகள் அணுகுவதற்கு இயலக்கூடிய ஹாட்லைன் எண்கள், புகார் அளிப்பதற்கும் உதவிக்கும் துணைபுரியும் குறுஞ்செய்திகள், காது கேளாதோருக்கான தொலைப்பேசி அழைப்பு வசதி[35] என தொடர்ந்து வழங்கின. சில நல்ல செயல்பாடுகள் அடையாளம் காணப்பட்டு கீழ் இருக்கும் ஆதாரவளங்களில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**மாநிலங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் என்ன?**

- **புகார் அளிப்பதற்கான செயல்முறைகள், ஹாட்லைன்கள், அவசரகால தங்குமிடங்கள் மற்றும் பிற உதவி முறைகள் அனைவருக்கும் அணுகுவதற்கு இயலக்கூடியதாக, செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களையும் உள்ளடக்கி இருப்பதை உறுதி செய்யவும்.**
- **செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களின் நிலைமையை தொடர்ந்து கண்காணிக்கவும்**, அதிலும் குறிப்பாக தனிமையில் இருப்பவர்களை. சமூக மற்றும் தன்னார்வ பன்முனை இயங்கும் பணிக்குழுக்கள் வாயிலாக அவர்களை தொடர்பு கொண்டு நம்பிக்கையூட்டும் விதத்தில் உரையாடலில் ஈடுபட வேண்டும்.
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள், அதிலும் குறிப்பாக குறைபாடுள்ள பெண்கள் மற்றும் இளம் பெண்கள் சந்திக்கும் வன்முறைகளில் உள்ள பேராபத்து குறித்த **விழிப்புணர்வை ஏற்படுத்தி பயிற்சியை அளிக்க வேண்டும்**. சக கூட்டாளிகள் ஆதரவை வளர்த்தெடுப்பது உட்பட, ஆதரிக்கும் பன்முனையில் இயங்கும் பணிக்குழுக்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

**ஆதாரவளங்கள்**

- உரிமை-அடிப்படை மற்றும் பாலினம்-குறித்து எழும் கேள்விகளுக்கான விடையளிக்கும் சேவைகள் -பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள பெண்கள் மற்றும் இளம்வயதினரின் பாலின மற்றும் இனபெருக்கத்துக்கான உடல்நலம் மற்றும் உரிமைகள் வழங்குதலுக்கான யுஎன்எஃப்பிஏ வழிக்காட்டுதல்கள்
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களுக்கு கொவிட்-19 தாக்கத்தின் போது உயிர் பிழைத்தவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும் சேவைகள்

## 7. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் அதிகமாக இடம் பெற்று இருக்கின்ற குறிப்பிட்ட வகை மக்கள் குழுக்களின் மீது கொவிட்-19ன் தாக்கம் என்ன? செயல்படும் நிலையில் குறைபாடுள்ள சிறை கைதிகள் மற்றும் போதுமான வசிப்பிட வசதியற்ற செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள்

### a. செயல்படும் நிலையில் குறைபாடுள்ள சிறை கைதிகள்

சிறைச்சாலை மக்கள் தொகையில், செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் அதிக விகிதத்தில் இருக்கிறார்கள்,[36] குறிப்பாக சமூகஉளவியல் குறைபாடுள்ளவர்கள் மற்றும் புத்தி சுவாதினமற்றவர்கள். சமூக இடைவெளிகளை கடைபிடிக்க முடியாத சுகாதாரமற்ற சூழ்நிலைகளில் கூட்ட நெரிசல் மிக்க பகுதிகளில் வாழ்பவர்களுக்கு நோய் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம். குறிப்பாக, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள கைதிகள் தங்கள் கூட்டாளிகளின் அதிகாரபூர்வமற்ற உதவிகளையே சார்ந்து இருக்கிறார்கள். உணவு, நடமாடுவது, குளிப்பது மற்றும் சிறைத்துறையின் நல்வாழ்வு சேவைகள் பொதுவில் அவர்களுக்கு ஒத்து வரக் கூடியதாக இல்லை.

சிறைச்சாலைகளில் உள்ள செயல்படும் நிலையில் குறைபாடு உடையவர்கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட விசாரனை கைதிகளாக உள்ளவர்கள் மட்டுமே இத்தகைய கடினமான சூழலை சந்திப்பதாக கொள்ள முடியாது, ஆனால், நிர்வாக அல்லது வேறு எந்த வகை தடுப்புக் காவலில் உள்ளவர்களும், குடியேற்றச் சட்டத்தின் தடுப்புக்காவலில் உள்ள குறைபாடுள்ளவர்களையும் உள்ளடக்கி உள்ளது.

**நம்பிக்கையூட்டும் வகையிலான சில செயல்பாடுகள் என்ன?**

- **பிரிட்டன் மற்றும் வடக்கு ஐயர்லாந்தில்,** சிறைகைதிகளுக்கு மீதமுள்ள தண்டனைக் காலம் இரண்டு மாதங்களுக்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில் அதை நிறைவேற்றும் முன்பே அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.[37] **அமெரிக்கா**வில், பல்வேறு மாநிலங்கள், கைதிகளை விடுவித்துள்ளன அல்லது விடுவிக்கும் செயல்பாட்டில் இருக்கின்றன.[38] இதே போன்று, கைதிகளை விடுவிக்கும் செயல்பாடு இரான்**, துருக்கி, இந்தோனேசியா**விலும் நடந்துள்ளன. **கொலம்பியா**வில், சுயமாக தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியாத செயல்படும் நிலையில் குறைபாடுள்ள கைதிகள் முன்னதாக விடுவிக்கப்படுவோர் பட்டியலில் இடம் பெறும் பயனாளிகள் ஆனார்கள்[39]. அதே போல **அர்ஜென்டினா**வில் உச்ச நீதி மன்றம் மற்றும் குற்றவாளிகள் வழக்காடு மன்றம் செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களை முன்னரே விடுதலை பெறக் கூடிய நபர்களாக அடையாளப்படுத்தியது[40]**. பிரேசிலில்**, தேசிய நீதி மன்றம், குற்றவாளிகளான சிறுவர்கள் அமைப்பில் உள்ளவர்கள் உட்பட, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள கைதிகளை விடுவிப்பது தொடர்பாக மறுபார்வையிட்டு மறுஆய்வு செய்து விடுவிக்க கோரி பரிந்துரைத்தது[41].

**மாநிலங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் என்ன?**

- **செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்கள், தண்டனை காலத்திற்கு முன்பே விடுதலைக்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் விசாரனை கால சிறைவாசத்தின் காரணமாக முன்னரே விடுதலைக்கு தகுதி பெறுபவர்கள் ஆகியோர் உட்பட தொற்றுக்கு ஆளாகும் வாய்ப்பு அதிகமுள்ள கைதிகளை விடுவித்து சிறைச்சாலை மக்கள் தொகையை குறைக்கவும்.** அவ்வாறு விடுவிக்கப்படுபவர்களுக்கு குடும்பம் மூலமாகவோ மற்றும்/அல்லது முறை சாராத பன்முனை பணிக்குழுக்கள் மூலமாகவோ சமூக ஆதரவை உறுதியாக வழங்குவது. அதற்கான நிதி தேவைக்கு பொது துறை அல்லது தனியார் துறை சேவை வழங்குனர்களை நாடுவது.
- செயல்படும் நிலையில் குறைபாடுள்ள கைதிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஆதரவு, உணவு, தண்ணீர் மற்றும் கழிப்பறைக்கான அணுகல் வசதி; தனிமைப்படுத்தல் மற்றும் சமூக இடைவெளி முறைகளை கடைபிடிப்பது; பாதுகாப்பு உபகரணங்களின் பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலை போன்றவைகள் உட்பட சிறையில் **தடுப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி** சிறைசாலையில் தொற்று ஏற்படும் அபாயத்தை குறைக்கவும்.

**ஆதாரவளங்கள்**

- [உலக சுகாதார அமைப்பு, சிறைச்சாலை மற்றும் இதர தடுப்பு காவல் இடங்களில் கொவிட்-19 தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள்]
- [ஐநா உட்கட்ட முகைமை பரிந்துரைக்குழு. கொவிட்-19: தங்கள் உரிமைகளை தொலைத்தவர்கள் மீதான கவனம் செலுத்தல்]

## b. போதுமான வசிப்பிட வசதியற்ற செயல்படும் நிலையில் குறைபாடு உடைய மக்கள்

செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள், அதிலும் குறிப்பாக சமூக உளவியல் குறைபாடுகள் மற்றும் அறிவுத்திறன் குறைபாடுகள் ஏழை மக்கள் குழுக்களில் அதிக விகிதத்தில் இருக்கிறார்கள். செயல்படும் நிலையில் குறைபாடுள்ள வசிப்பிடமற்ற மக்கள் மற்றும் அவசரகால தங்குமிடங்களில் மற்றும் அதிகாரபூர்வமற்ற குடியிருப்புக்களில் வாழ்பவர்கள் கொவிட்-19 பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியமுள்ளது. அதற்கு காரணமாக விளங்குவது நெரிசலான வாழ்விடங்கள், தண்ணீர் மற்றும் கழிப்பிடங்களை எளிதில் அணுக இயலாத சூழல் மற்றும் முன்பிருந்தே தொடர்ந்த சீர் கேடான உடல் நிலை.

செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களை உள்ளடக்கிய வசிப்பிடமற்றவர்களை கொவிட்-19 நெருக்கடிக்கு உள்ளாக்கி தங்குமிடம் மற்றும் ஆதரவை நாட வைத்திருக்கிறது. நெரிசல் பகுதிகளாக விளங்கும் அவசரக்கால தங்குமிடங்கள் வைரஸ் பரவலுக்கு காரணமாக இருக்கின்றன. தங்களுடைய வாழ்விட வசதியின்மையின் காரணமாக சமூக இடைவெளி கட்டுப்பாடுகளை கடைபிடிக்க முடியாதவர்களும் ஒரு பாதகமான சூழலில் இருக்கிறார்கள்.

**நம்பிக்கையூட்டும் வகையிலான சில செயல்பாடுகள் என்ன?**

- **அமெரிக்கா**வில் வசிப்பிடமில்லை என்ற விடயம் [குறிப்பிட்ட வழிக்காட்டுதல்களால்] நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதில் செயல்படும் நிலையில் உள்ள குறைப்பாடும் ஒரு கூறாக தகவல் தொடர்பில் உள்ளடங்கியிருக்கிறது.
- வசிப்பிடமற்றவர்களுக்கான நல்வாழ்வு, சுகாதார சேவைகளை **சிலி** நாட்டு அரசாங்கம் தெருக்களில் இருந்து செயல்படப்போவதாக அறிவித்து அதன் படி செயல்பட்டு வழங்கியது.
- **அர்ஜென்டினா**வில் 1000 படுக்கைகள் ஒரு பெரிய வளாகத்தில் நிறுவப்பட்டது. பெரிய அளவில் மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படாதவர்களுக்கு சமூக இடைவெளியை உறுதிபடுத்தும் வகையில் அவசரக்கால தங்கும் இடமாக அது செயல்பட்டது.

**மாநிலங்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் என்ன?**

- **செயல்படும் நிலையில் குறைபாடுள்ள வசிப்பிடமற்றவர்கள் கண்ணியமாகவும் மதிப்புடனும் நடத்தப்படுவதை உறுதி செய்யுங்கள்.** வன்முறை சூழல்களை தவிர்க்கும் நோக்கில் மக்கள் தொடர்பில் **பயிற்சி மற்றும் வழிக்காட்டுதல்**-, நேரடி தொடர்பாளர்களுக்கு வழங்கப்படும்.
- **கட்டாய இடப்பெயர்வுகள் மற்றும் அதிகாரபூர்வமற்ற குடியிருப்புக்களை தவிர்க்கவும்**. இது வைரஸ் பரவல் வேகமாக துணை செய்யும். குறைபாடுள்ள வசிப்பிடமற்றவர்களை அவர்கள் வாழ்விடங்களிலேயே சிகிச்சை அளித்து பாதுகாப்பான தங்குமிட வசதியை அணுக இயலக்கூடிய இடங்களில் அளிக்கவும்.
- **சமூக இடைவெளி**, வாடகை பொருட்கள், ஹோட்டல்கள், மாநாட்டு சந்திப்பு மையங்கள் மற்றும் அரங்குகள், போதுமான சுகாதாரம் மற்றும் **உரிய வாழ்வியல் சூழ்நிலைகளை** வழங்குகின்றது என பல்வேறு தங்குமிட தெரிவுகளை ஆராயவும்.
- **சுகாதார வசதிகளை தெருவிலேயே வழங்குங்கள்.** தண்ணீர், சோப்பு, நீர் தொட்டி மற்றும் மற்ற ஆதாரங்கள் இடம் பெற்று இருக்க போதுமான தண்ணீர் மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்தவும்.

**ஆதாரவளங்கள்**

- போதுமான வசிப்பிடத்திற்கான உரிமை குறித்து ஐநா சிறப்பு அறிக்கையாளர், கொவிட்-19 வழிக்காட்டுதல்: வசிப்பிடமின்றி வாழ்பவர்களுக்கான பாதுகாப்பு
- போதுமான வசிப்பிடத்திற்கான உரிமை குறித்து ஐநா சிறப்பு அறிக்கையாளர், கொவிட்-19 வழிக்காட்டுதல்: அதிகாரபூர்வமற்ற குடியிருப்புக்களில் வசிப்பவர்களுக்கான பாதுகாப்பு

## ஆதாரவளங்கள்-பொது

- செயல்படும் நிலையில் குறைபாடு மற்றும் அணுகுவதற்கு இயலும் தன்மை குறித்து சிஆர்பிடி குழு மற்றும் ஐநா பொது செயலாளரின் சிறப்புத் தூதர் இணைந்து கூட்டறிக்கை
- சர்வதேச குறைபாடு உடையவர்கள் கூட்டு, கொவிட்-19 மற்றும் குறைபாடு உடையவர்கள் இயக்கம்
- சர்வதேச குறைபாடு உடையவர் மற்றும் முன்னேற்ற மன்றம்: குறைபாடு உடையவர் வளங்களின் பெட்டகம் மற்றும் கொவிட்-19
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு, கொவிட்-19 எதிர்வினையாற்றலில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்கள் உட்பட எவரும் எப்போதும் கைவிடப்படவில்லை

- சமூக உளவியல் குறைபாடு உடைய மக்களுக்கான பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்பு, கொவிட்-19 குறித்த அறிக்கை மற்றும் சமூக உளவியல் குறைபாடு உடைய மக்கள் மற்றும் அவர்களுக்கான பரிந்துரைகள்
- கொவிட்-19 எதிர்வினையாற்றலில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய மக்கள் குழுக்கள் கைவிடப்படவில்லை என்பதை உறுதி செய்ய ஐநா பணியாற்றுகிறது
- யுஎன் இஎஸ்சிஏபி கொவிட்-19 எதிர்வினையாற்றல் குறைபாடு உடையவர்களுக்கான உரிமை மற்றும் உள்சேர்ப்பை உறுதிப்படுத்துவது
- ஐநா முகவர் தொடர்பு செயற்பாட்டுக் குழு, கொவிட் 19 தங்கள் உரிமைகளை இழந்தவர்கள் மீதான கவனம்
- யுஎன்பிஆர்பிடி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் இதர பிரிவினர் கொவிட்-19 நெருக்கடி தொடர்பிலான எதிர்வினையாற்றல் செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களையும் உள்ளடக்கிய சமூக பாதுகாப்பு
- கொவிட்-19 உடன் எந்த விதிவிலக்கும் இல்லை: "உயிர்-காக்கும் முயற்சிகளில் ஈடுபடும் உரிமை அனைவருக்கும் உண்டு"- (ஐக்கிய நாட்டு) ஐநா சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் சுயசார்பு வல்லுனர்கள் கருத்து
- கொவிட்-19, செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களின் உரிமைகள் குறித்து ஐநா சிறப்பு அறிக்கையாளர்: செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களை யார் பாதுகாக்கிறார்கள்?
- உரிமை-அடிப்படை மற்றும் பாலினம்-குறித்து எழும் கேள்விகளுக்கான விடையளிக்கும் சேவைகள் -பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள பெண்கள் மற்றும் இளம்வயதினரின் பாலின மற்றும் இனபெருக்கத்துக்கான உடல்நலம் மற்றும் உரிமைகள் வழங்குதலுக்கான யுஎன்எஃப்பிஏ வழிக்காட்டுதல்கள்
- கொவிட்-19ற்கான எதிர்வினையாற்றல் குறித்து யுனிசெஃப், செயல்படும் நிலையில் குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான கவனிப்பும் கண்ணோட்டமும்
- உலக சுகாதார அமைப்பு, கொவிட்-19 நோய் தொற்று பரவலின் போது செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்கள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டியவை
- உலக சுகாதார அமைப்பின் நோய் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு வழிக்காட்டுதல்கள் கொவிட்-19 பின்புலத்தில் நீண்ட கால பராமரிப்பு நிலையங்களுக்கானது இடைக்கால வழிக்காட்டுதல், 21 மார்ச் 2020
- உலக சுகாதார அமைப்பு, சிறைச்சாலை மற்றும் இதர தடுப்பு காவல் இடங்களில் கொவிட்-19 தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள்

---

[1] பார்வையிடவும் http://www.sanita.sm/on-line/home/bioetica/comitato-sammarinese-di-bioetica/documents-in-english/documento2116023.html.

[2] பார்வையிடவும் https://www.hhs.gov/sites/default/files/ocr-bulletin-3-28-20.pdf.

[3]பார்வையிடவும்https://www.khaleejtimes.com/coronavirus-pandemic/combating-coronavirus-uae-launches-home-testing-programme-for-people-of-determination

[4] பார்வையிடவும் https://www.facebook.com/pg/chrgovph/photos/?tab=album&album_id=2681151298668065&__tn__=-UC-R

[5]பார்வையிடவும்https://www.canada.ca/en/employment-social-development/news/2020/04/backgrounder--covid-19-disability-advisory-group.html

[6] அடிலினா கோமாஸ்-ஹெராராமற்றும்ஜோஸிபா ஸலாகின், “காப்பகங்கள் மற்றும் பராமரிப்பு நிலையங்களில் கொவிட்-19 நோய் பரவல் காரணமான இறப்பக்கள்: தொடக்கநிலை சர்வதேச ஆதாரம்”, நீண்ட கால பராமரிப்பு கொள்கை சர்வதேச பன்முனை பணிக்குழு அமைப்பு, 12 ஏப்ரல் 2020, பக்கம் 5.

[7] பார்வையிடவும் http://www.health.gov.on.ca/en/pro/programs/publichealth/coronavirus/docs/2019_testing_guidance.pdf

[8] கொவிட் 19 நோய் தொற்று சூழலில் சமூக உளவியல் ரீதியாக செயல்படும் நிலையில் குறைபாடுள்ள மக்களுக்கான பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புகளின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள், இங்கே https://dkmedia.s3.amazonaws.com/AA/AG/chrusp-biz/downloads/357738/COVID19-and-persons-with-psychosocial-disabilities-final_version.pdf

[9] சீனாவில் நோய்பரவல் ஆரம்ப கட்டத்தில், பெருமூளை வாத நோய் கொண்டிருந்த ஒரு 19-வயது இளைஞனின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டதால், ஆதரிக்க யாருமின்றி அந்த இளைஞன் இறந்துவிட்டான்.

[10] பாராகுவேயில் செல்படும் நிலையில் குறைபாடு குறித்து கவனம் செலுத்தும் அமைப்பான (SENADIS) சைகை மொழியில் தகவல்களை வழங்க சமூக ஊடகங்களை பயன்படுத்தி காதுகேளாதர் சமூகம் தகவல்களை அணுக ஊக்கப்படுத்துகிறது.

[11] பார்வையிடவும் SENADIS, Panamá toma medidas para la inclusión de las personas con discapacidad frente al covid-19, 3.1.

[12]பார்வையிடவும்https://www.health.govt.nz/our-work/diseases-and-conditions/covid-19-novel-coronavirus/covid-19-novel-coronavirus-resources/covid-19-novel-coronavirus-new-zealand-sign-language

[13] பார்வையிடவும் https://coronavirus.gob.mx.

[14] அர்ஜென்டினா, Decree 297/2020, கட்டுரை 6.5.

[15] கொலம்பியா போன்ற நாடுகள் இந்த நடைமுறையை ஊக்கப்படுத்துகின்றன (பார்வையிடவும் https://www.minsalud.gov.co/sites/rid/Lists/BibliotecaDigital/RIDE/DE/PS/asif13-personas-con-discapacidad.covid-19.pdf)

[16] பார்வையிடவும் SENADIS, *Panamá toma medidas para la inclusión de las personas con discapacidad frente al covid-19*, 3.3.

[17] பார்வையிடவும்பிரிட்டன் மற்றும் வடக்கு ஐயர்லாந்து, கொரோனா வைரஸ் நோய்தொற்று பரவல் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்: நீங்கள் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும் என்னென்ன, பிரிவு15.

[18] பார்வையிடவும் Secrétariat d’Etat auprès du Premier Ministre chargé des personnes handicapées, at https://handicap.gouv.fr/autisme-et-troubles-du-neuro-developpement/infos-speciales-coronavirus/article/information-covid-19-et-confinement

[19] பார்வையிடவும் ஓஇசிடி, காய்ச்சல், பணி மற்றும் செயல்படமுடியாமை.*தடைகளைதகர்ப்பது*, பக்கம் 23, மற்றவர்களோடு ஒப்பிடுகையில் செயல்படும் நிலையில் குறைபாடு உடையவர்கள் அதிக சதவிகிதம் முடங்கிகிடக்கிறார்கள்: 49% முதல் 20%, வரை.

[20] பார்வையிடவும், UNDESA, *செயல்படும் நிலையில் குறைபாடு மற்றும் வளர்ச்சி அறிக்கை*, பக்கம் 157, படம் II.81, சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுள்*செயல்படும் நிலையில் குறைபாடு* உள்ளவர்கள் 9% அதிகம் இருப்பதை சுட்டிக்காட்டும் (19 நாடுகளின் தகவல் தரவுகள்)

[21] பல்கேரியா, மாநில அரசாங்க பதிவிதழ், 24, மார்ச் 2020, கட்டுரை 12, ஐஎம்எஃப், கொவிட்-19ற்கான கொள்கை பதிலுரைகள், https://www.imf.org/en/Topics/imf-and-covid19/Policy-Responses-to-COVID-19#T

[22] பார்வையிடவும் https://www.argentina.gob.ar/noticias/bono-extraordinario-para-las-personas-con-discapacidad-que-cobran-pensiones-no

[23] பார்வையிடவும் https://informations.handicap.fr/a-prime-solidaire-aah-covid-12818.php

[24] IMF, கொவிட்-19 கொள்கை விளக்கங்களுக்கான உடனடி கருத்து, https://www.imf.org/en/Topics/imf-and-covid19/Policy-Responses-to-COVID-19#T

[25] பார்வையிடவும் https://www.benefits.gov/benefit/945

[26] எடுத்துக்காட்டாக செயல்படும் நிலையில் குறைபாடு உடையவர்கள் தொடக்க கல்வியை முடிக்கும் விகிதம் 56% இருக்கிறது, ஒப்பிடுகையில் மற்றவர்களின் விகிதம் 73%.

[27] யுனெஸ்கோ கணிப்புபடி உலக மாணவர்கள் மக்கள் தொகையில் 91% பேர் மீது கல்வி நிறுவனங்களின் மூடல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பார்வையிடவும் https://en.unesco.org/covid19/educationresponse

[28] பார்வையிடவும் அமெரிக்க கல்வித் துறை, கொரனா வைரஸ் நோய்த் தொற்று பரவல் 2019 மார்ச் காலத்தில் செயல்படும் நிலையில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சேவைகள் குறித்த கேள்விகளும் விடைகளும், மார்ச் 2020

[29] பார்வையிடவும் https://educacion.gob.ec/wp-content/uploads/downloads/2020/03/Anexo-2-RECOMENDACIONES-A-LOS-DOCENTES-PARA-BRINDAR-APOYO-PEDAGÓGICO-A-LOS-ESTUDIANTES-EN-AISLAMIENTO-EN-FUNCIÓN-DE-PREVENIR-POSIBLES-CONTAGIOS-POR-ENFERMEDADES-RESPIRATORIAS.pdf

[30] பார்வையிடவும் பிரிட்டன், https://www.gov.uk/guidance/supporting-your-childrens-education-during-coronavirus-covid-19. இதையும் பார்வையிடவும் https://www.gov.uk/guidance/help-children-with-send-continue-their-education-during-coronavirus-covid-19

[31] பார்வையிடவும் உலக சுகாதார அமைப்பு, கொவிட்-19 மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை *நல்வாழ்வு துறை/பிரிவு என்ன செய்யலாம், காணவும்* https://apps.who.int/iris/bitstream/handle/10665/331699/WHO-SRH-20.04-eng.pdf

[32] UNDESA, செயல்படும் நிலையில் குறைபாடு மற்றும் முன்னேற்றத்துக்கான அறிக்கை, பக்கம். 7, 16, 113-115, 249-252, https://social.un.org/publications/UN-Flagship-Report-Disability-Final.pdf; செயல்படும் நிலையில் குறைபாடுள்ளவர்களின் உரிமை குறித்து சிறப்பு அறிக்கையாளர் அறிக்கை, A/72/133, பத்தி 35.

[33] எம்மா பியர்ஸ்,*Dகொவிட்-19 நோய் தொற்று காலத்தில் ஜிபிவி திட்ட முன் கருத்துக்கள்* https://gbvaor.net/sites/default/files/2020-03/Disability%20Considerations%20in%20GBV%20programming%20during%20COVID_Helpdesk.pdf

[34] பெரு, Ministerio de Desarrollo e Inclusión Social, *Resolución Viceministerial N° 001-2020-MIDIS/VMPES*, 24 April 2020, at https://www.gob.pe/institucion/midis/normas-legales/484313-001-2020-midis-vmpes

[35] பாலியல் வன்கொடுமை, குடும்ப மற்றும் அருகாமை சமூக வன்முறை குறித்து ஆஸ்திரேலிய தேசிய ஆலோசனை சேவை https://www.1800respect.org.au/accessibility/; UK's Coronavirus (COVID-19): support for victims of domestic abuse https://www.gov.uk/government/publications/coronavirus-covid-19-and-domestic-abuse/coronavirus-covid-19-support-for-victims-of-domestic-abuse#disability-specialist-services

[36] சர்வதேசசிறைச்சாலைபோக்குகள் 2020, தண்டனைமற்றும்சீர்திருத்தமுறைகள் https://cdn.penalreform.org/wp-content/uploads/2020/04/Global-Prison-Trends-2020-Penal-Reform-International.pdf

[37]வழிக்காட்டுநெறிகள்: கொரனாவைரஸ் (கொவிட்-19) மற்றும்சிறைச்சாலைகள், இங்கே https://www.gov.uk/guidance/coronavirus-covid-19-and-prisons

[38] https://www.prisonpolicy.org/virus/virusresponse.html

[39] Colombia, Decreto legislativo 546, 14 April 2020, at https://dapre.presidencia.gov.co/normativa/normativa/DECRETO%20546%20DEL%2014%20DE%20ABRIL%20DE%202020.pdf

[40] அர்ஜென்டினா, தேசியஉச்சநீதிமன்றம், *Acordada 10/2020*, மற்றும் செயல்பாட்டு வழிமுறைக்கான துணை அமைம்ப்புக்கள்,குற்றவாளி முறையிடுதலுக்கான நீதிமன்றம், *Acordada 9/2020*, at https://cnpt.gob.ar/wp-content/uploads/2020/04/Acordada-9.20-CFCP.pdf

[41] பிரேசில், தேசியநீதிகுழு, பரிந்துரை 62, 17 மார்ச் 2020, காணவும் https://www.cnj.jus.br/wp-content/uploads/2020/03/62-Recomenda%C3%A7%C3%A3o.pdf